# ஏரி காத்த ராமன்.



மதுராந்தகம் தலமதில் உறைகின்ற பரமனே ,

வதுவை மணக்க வில்தனை முறித்த ஸ்ரீராமனே !

மதுராந்தகம்......

கொள்ளை கொண்டிடும் அழகியத் திருமுகம் ,

உடையவர்க்கு பஞ்சசமஸ்காரம் நடந்தயிடம் ;

வெள்ளைதுரைக்கு காட்சிதந்திட்ட திருத்தலம் - உன்னை ,

அடையநினைப்பவர்களுக்கு இதுவே பரமபதம் !

மதுராந்தகம்......

பாரிலுள்ளோர் உய்ய கோதண்டராமனாயன்று ,

ஏரிதனைக் காத்திட்டாய் இத்தலத்தில் நின்று ;

கோரிய வரங்களை தந்திடும் பரமன்நீயென்று ,

வாரியே வழங்கு நின் அருளை ராமனேயின்று .

மதுராந்தகம்......

*************************************************